SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

வகுப்பு: 5 **முதல்பருவத் தேர்வு - 2019** மதிப்பெண்கள்: 60

தேதி: 25.9.19 பாடம் : **தமிழ்** கால அளவு : **3** மணி நேரம்

**விடைக்குறிப்புகள்**

**பகுதி - அ**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20)**

**1.** கடல் பாடலின் ஆசிரியர் யார்?

அ. பாரதியார் **ஆ. கவிமணி** இ. ஔவையார்

2. புரவி என்பது எதனைக் குறிக்கும்?

அ. யானை ஆ. பூனை **இ. குதிரை**

3. கவிமணி பிறந்த ஊர்

அ. பாரூர் ஆ. வேலூர் **இ. தேரூர்**

4. மூதுரையின் ஆசிரியர் யார்?

அ. பாரதியார் **ஆ. ஔவையார்** இ. பாரதிதாசன்

5. பசி வந்திடப் ________ போகும்.

அ. துன்பம் **ஆ. பத்தும்** இ . வழி

6. இறந்தவாறு நடித்தது ________

அ. புலி ஆ. காகம் **இ. மான்**

7. ________ இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும்.

**அ. குழந்தைகள்** ஆ. குலந்தைகள் இ. குளந்தைகள்.

8. சிறுமியின் நற்பண்பிற்குக் கிடைத்த பரிசு என்ன?

அ. கொழுக்கட்டை ஆ. பூக்கள் **இ. தங்கக்காசு**

9. சொல் ________ வகைப்படும்.

அ. 3 **ஆ. 4** இ . 8

10. உறுமீன் - பொருள் தருக.

அ. சிறிய மீன் **ஆ. பெரிய மீன்** இ. வருமீன்

11. கழை என்னும் சொல்லின் பொருள்

**அ. கரும்பு** ஆ. கறும்பு இ. கருப்பு

12. புகழ் என்பதன் எதிர்ச்சொல்

அ. மகிழ் **ஆ. இகழ்** இ. சிமிழ்

13. யானை

அ. அகவும் ஆ. கூவும் **இ. பிளிறும்**

14. என்றெண்ணி - பிரிக்கக் கிடைப்பது

அ. என் + றெண்ணி **ஆ. என்று + எண்ணி** இ. என்றே + எண்ணி

15. கண்+இமைக்கும் சேர்த்து எழுதக் கிடைப்பது ______

அ. கண்இமைக்கும் **ஆ. கண்ணிமைக்கும்** இ. கண்ணமைக்கும்.

16. பாடல் பாடினாள் - இதில் ________ இல்லை.

**அ. எழுவாய்** ஆ. பயனிலை இ. செயப்படுபொருள்

17. புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தவர்______

**அ. ஐசக் நியூட்டன்** ஆ. ஜேம்ஸ் வாட் இ. இரேனே லென்னக்

18. _________ எங்குச் சென்றீர்கள்

அ. நீ **ஆ. நீங்கள்** இ. நாங்கள்.

19. புலி ___

அ. குட்டி **ஆ. பறழ்** இ. பிள்ளை

20. இடம் ________ வகைப்படும்.

**அ. 3** ஆ. 5 இ. 6

**II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:** (20)

21. இதயத்துடிப்பைக் கண்டறியும் கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?

**இதயத்துடிப்பைக் கண்டறியும் கருவியைக் கண்டுபிடித்தவர் இரேனே லென்னக்.**

22. கடல் நமக்கு அளிக்கும் வளங்கள் யாவை?

**கடல் நமக்கு அளிக்கும் வளங்கள்:**

**முத்துகள், மழைநீர் , மீன்வளங்கள் , சிப்பிகள்**

23. பொருட்செல்வமே சிறந்த செல்வம் என்பதற்கு மலர்விழி கூறிய காரணம் யாது?

(i). பொருட்செல்வம் இல்லையென்றால் நமது தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாது.
(ii). பொருள் உடைமை பெருமை தரும்.
(iii). பொருளால் நம் வாழ்வு வளம் பெறும்.

24.கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?

**கொக்கு தனக்கான பெரியமீனின் வருகைக்காகக் காத்திருக்கிறது.**

25. உனக்குத் தெரிந்த அறிவியல் அறிஞர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.

**ஐசக் நியூட்டன், தாமஸ் ஆல்வா எடிசன் , இரெனே லென்னக், அப்துல்கலாம்.**

26. பாரதிதாசன் எழுதிய நூல்கள் யாவை?

**இருண்ட வீடு, குடும்ப விளக்கு , அழகின் சிரிப்பு, பாண்டியன்பரிசு.**

27. பழமொழி என்பது யாது?

**நம் முன்னோர்கள் தங்கள் அனுபத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள் ஆகும்.**

28. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?

**கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது பொருட்செல்வம் ஆகும்.**

29. உனக்குத் தெரிந்த இரண்டு பழமொழிகளை எழுதுக.

(i). **அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்.**
(ii). **இக்கரைக்கு அக்கரை பச்சை.**

30. மனிதனின் சிந்தனையால் எது வளரத் தொடங்கியது?

**மனிதனின் சிந்தனையால் அறிவு வளரத் தொடங்கியது.**

**III. பின்வரும் படத்தைப் பற்றி ஐந்து வரிகள் எழுதுக**. (5)

31.  பசு பால் தரும். பசுவின் சாணம் எருவாகப் பயன்படுகிறது. பசுவை நாம் தெய்வமாக வழிபடுகிறோம்..........................

**IV. பத்தியைப் படித்து விடையளி**: (5)

நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படும் குமரி மாவட்டத்தில்1908 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29ஆம் நாள் சுடலைமுத்து - இசக்கியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவர் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன். இளம் வயதிலேயே கல்வியை இழந்த இவர் குடும்பத்திற்கு உதவிட நாடக அரங்குகளில் சேர்ந்து சிரிக்க சிரிக்கப் பேசி மக்களைச் சிந்திக்கவும் வைப்பார். பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவையைக் கையாள்வதில் சிறந்து விளங்கினார். ‘வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்’என்று கூறினார்.

வினாக்கள்:

32. நாஞ்சில் நாடு என்று அழைக்கப்படுவது **குமரி மாவட்டம்**

33. ‘வாய் விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்’என்று கூறியவர் **என்.எஸ்.கிருஷ்ணன்**

34. என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களின் பெற்றோர் **சுடலைமுத்து - இசக்கியம்மாள்**

35. பிறர் மனம் புண்படாத வகையில் நகைச்சுவையைக் கையாள்வதில் சிறந்து விளங்கியவர் **கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்**

V. 36. உன் ஊர்த்த்ருவிழாவிற்குச் செல்ல **ஒருநாள் விடுப்பு** வேண்டி வகுப்பு ஆசிரியருக்கு விண்ணப்பம். எழுதுக. (5)

அனுப்புனர் - 1 பெறுநர் - 1 பொருள் - 1 கருத்து - 1 உறைமேல் முகவரி - 1

**VI. பின்வரும் துணைப்பாட வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு விடையளி**: (5)

37. வறுமையிலும் நேர்மை கதையின் கருத்தைச் சுருக்கி எழுதுக.

**குறிப்புச் சட்டகம் - முன்னுரை - பொருளுரை ( உட்தலைப்புகள் ) முடிவுரை - நீதி.**

38. தப்பிப் பிழைத்த மான் கதையினைச் சுருக்கி வரைக.

**குறிப்புச் சட்டகம் - முன்னுரை - பொருளுரை ( உட்தலைப்புகள் ) முடிவுரை - நீதி**.